**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 102/2022**

2025–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24–ம் நாள் திங்கட்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 24.11.2025 | | |
| பெயர்: | நூருன்னிசா<br>(PW–1 Chief ) | கணவர் பெயர்: | முகம்மது பாஷிக் |
| கிராமம்: | சேந்தங்குடி | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | வீட்டுக்குடித்தனம் | வயது : | 42/2025 |

**<u>முதல் விசாரணை : 24.11.2025</u>**

நான் இவ்வழக்கின் 2–ம் வாதியாவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 18.05.2007–ம் தேதியிட்ட பாத்திமா பீவி கிரயம் பெற்ற கிரய சாசனத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 1** ஆகவும்

2. 28.02.2022–ம் தேதியிட்ட வில்லங்க சான்றிதழின் இணைய வழி பதிவிறக்க நகல் **வா.சா.ஆ 2** ஆகவும்,

3. சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அசல் வழக்கு எண் 183/2021–ன் வழக்குரையின் சார்வு நகல் **வா.சா.ஆ 3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.